# மணிவிழா வாழ்த்து!

நாள்: 23-12-2020

## இணையர்: கலியமூர்த்தி – மீனா



அழகுடன் அகவை அறுபதை நிறைவுசெய்து,
எழுபதை நோக்கிப் பயணம் கொள்ளும்; எங்களின்,
கெழுதகை நண்பர் **கலியமூர்த்தி** காணும்சீர்;
பழுதில்லா மணிவிழா தானும் சிறந்து ஏக,

விழுமிய நட்பினோடும் வெள்ளிய அன்பினோடும்,
பழுதிலாக் காலம் பலவையும் கண்டதாம் நட்பில்
விழுதாய் மனதிலேற்றிச் சொல்லும் வாழ்த்து!
அழகிய மக்கள் மூவர் அணியதாய் துணைவி,

பழுதில்லா அன்பின் தாயவள் அன்னை மீனாள்!
அழகியச் சொல்லின் கேள்வன் கலிய மூர்த்தி
பழகிய நட்பின் சீலன் பண்புசீர் கவிஞனாவான்!
எழுதியப் பாக்கள் சிலநீந்தும் நாளும் நெஞ்சில்!

காவிரியின் குறுக்கே நீந்தியக் கவிதை;
மாவிலைத் தோரணமாய் நெஞ்சின் நினைவில்!
மேவிய காலம் யாவும் மேன்மையாச் சிறந்து,
காவியம் கண்ட பெருமை கொண்டு மண்ணில்,

களிப்புடன் வாழ்ந்திருக்க இந்நாளில் வாழ்த்து!
விளிக்கும் குரல்கூட காவிரி வாசம் சொல்லும்!
அளித்த அன்பினாலே அழைப்பேன் காரைக்கால்
களித்த முகத்தில் காணுவேன் நட்புதானே!

அன்புடன்,

**கு.ப. அசோகன்,**
சுங்க இல்ல நினைவுகளோடு.